# மூலிகை வளர்ப்போம் பயன் பெறுவோம்



## 07. முன்னை

**தாவரவியல் பெயர்:** *Premna obtusifolia Linn*

**குடும்பம்:** Verbenaceae

**சிங்களப் பெயர்:** ஹீன் மிதி

**சமஸ்கிரத பெயர்:** அக்னிமன்த

**தமிழ் பெயர்:** முன்னை

**ஆங்கிலப் பெயர்:** Headache Tree

**நடுகை பாகம்:** கிளைத் துண்டுகள்

**மருந்தாக பயன்படும் பாகங்கள்:** விசேடமாக வேர்கள், பட்டை, மற்றும் இலைகள் போன்றனவும் எடுக்கப்படுகின்றது.

### அறிமுகம்

இது மிதி (முன்னை) எனும் பெயரில் சிங்களத்தில் அழைக்கப்பட்டாலும் இது திராட்சை குலத்திற்கு உரியவையல்ல. அது கொடியாகும். இவை நிர்குண்டி குலத்தைச் சேர்ந்த புதர்கள் ஆகும். இது பெரிய ஐந்து வேர்களில் ஒன்றாகும். இது காய்ச்சலுக்கு பயன்படுத்தப்படுகின்றது. வறண்ட மற்றும் இடைநிலை மண்டல சூழலில் நன்கு வளரக்கூடிய தாவரமாகும்.

### தாவரவியல் விளக்கம்

இது ஒரு புதர் அல்லது மரம் ஆகும். இது 8-10 m வரை உயரமானது. அரிதாக தரையில் படர்ந்து வளரும் கொடியாகவும் காணப்படுகிறது. தண்டின் மையப்பகுதியின் விட்டம் சுமார் 10 cm ஆகும். இளம் கிளைகள் இளம் பச்சை நிறத்தில் இருக்கும். தண்டு முதிர்வடையும் போது கபில நிறமாக மாறும். இலை வளைய வடிவில் தண்டுடன் இணையும். பிரதான கிளைகளுக்கு இடையிலான தூரம் 1-6 cm ஆகும். இலை அமைவு ஒன்றுக்கொன்று குறுக்கானது. இலை உதிரக்கூடியது. இலை காம்பு மெல்லியவை. இலை மேற்பரப்புகள் இரண்டும் கடும் பச்சை நிறமானது, அடிப்பகுதி சற்று இளம் நிறமாக காணப்படும். இலை நீள்வட்ட வடிவிலோ, முட்டை வடிவிலோ இருக்கும். பூக்கள் முனைப்பூந்துணர் வடிவானவை. ஒரு கூட்டு அச்சுகளில் பல பூக்கள் காணப்படும். பூக்கள் மிகவும் சிறியவை மற்றும் விரும்பத்தகாத நறுமணம் கொண்டவை. பழம் நிலையற்றது. கோள வடிவானது.

### விவசாய விளக்கம்

முன்னை தாவரத்தின் நன்கு முதிர்ந்த 15 cm வரை உயரமான கிளை துண்டுகளை பசளை கலந்த மண் கொண்ட பொலித்தீன் தொட்டிகளில் நட வேண்டும். இவ்வாறு நட்டு 3 மாதங்களுக்கு நிழலில் வைக்க வேண்டும். நன்கு நீர் ஊற்ற வேண்டும். இது பரவி வளரக்கூடிய தாவரமென்பதால் குழிகளுக்கு இடையிலான இடைவெளி 3*3 m ஆக இருக்க வேண்டும். அறுவடை மூலம் வேர் பெறப்படுமெனின் வளரும் தாவரத்தை கத்தரித்து வைத்து கொள்வதன் மூலம் நடுகைக்காக பயன்படும் தாவரத்தின் அளவை அதிகரித்துக் கொள்ளலாம். இதன் மூலம் அதிகளவான வேர்களைப் பெற்றுக் கொள்ள முடியும். கிளைகளை நாற்று மேடையில் நட பசளை கலவைகளை பயன்படுத்த முடியும்.

### அறுவடை மற்றும் சேமிப்பு

வேர்களை பிடுங்கும் போது ஒரு தாவரத்தின் ஒரு பக்கத்தில் உள்ள வேர்களுக்கிடையில் ஒன்றை வெட்டி அகற்றி அதற்கு தென்னஞ்சோறு மற்றும் கொம்போஸ் பசளை என்பவற்றை சேர்க்க வேண்டும். 6 மாதங்களின் பின் மீண்டும் அறுவடை செய்யும் போது முதல் எடுத்த பக்கத்திற்கு எதிர் பக்கமாக வேர்களை வெட்டி எடுக்க வேண்டும். அதன் போது முதல் முறை வேர் பெறப்பட்ட பகுதி மீண்டும் உறுதியாக வேர் பிடித்துள்ளதா என்பதை பரிட்சித்து பார்க்க வேண்டும்.

### தற்போதைய பயன்பாடு மற்றும் சந்தை நிலைமை

ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் அதிகமாக பயன்படுத்தப்படும் மருந்தாகும். ஆயுர்வேத மருந்துற்பத்தியகத்தில் வருடத்திற்கு சுமார் 50,000 kg பயன்படுத்தப்படுகின்றது. பெரும்பாலும் உலர்ந்த மூலிகைகளே பயன்படுத்தப்படுகின்றது. முன்னை பெரும்பாலும் உள்நாட்டில் கிடைக்கும் மூலிகையாகும்.

தற்போது ஒரு கிலோவின் விலை சுமார் 250.00 ரூபா ஆகும்.


**தொகுப்பு:**

வைத்தியர் லக்ஸாந்த குணசிங்க,
ஆயர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி,
கங்க வட கோரல.

**தமிழாக்கம்:**

வைத்தியர் எப். எச். கைசர்தீன்,
ஆயர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி,
கங்க இஹல கோரல.